# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 09.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 9618/SCIC/2023**

திரு B. சகில் சேட் மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
பிரிவு அலுவலர்,
வணிகவரி மற்றும் பதிவு (ஜே2)த்துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
நாகல்நாயக்கன்பட்டி,
திண்டுக்கல் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர் 'சிஏ' பிரிவு,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை 28

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 01.03.2023 தேதியிட்டு சார்பதிவாளர் அலுவலகம், நாகல் நாயக்கன்பட்டி என்ற முகவரிக்கு இணைய வழியில் அனுப்பிய மனுவில். முந்தைய ஆவண எண். 178/1976 என்பதற்கான வில்லங்கசான்றின் நகல் என்பவை உள்ளிட்ட தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இணைய வழியில் பெறப்பட்ட மனுதாரரின் மனுவினை வணிகவரி மற்றும் பதிவு (ஜே2)த்துறை, தலைமைச்செயலகம், சென்னை அலுவலக பொதுத் தகவல் அலுவலரால் 16.03.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் சென்னை பதிவுத்துறைத்தலைவர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மாற்றம் செய்யப்பட்டு அதன் விவரம் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அம்மனுவினை பெற்ற பதிவுத்துறை அலுவலக சிர பிரிவு கண்காணிப்பாளர் / பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் மனுவினை சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் 10.04.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மாற்றம் செய்யப்பட்டு, அதன் விவரமும் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் மனுவினைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், நாகல்நாயக்கன்பட்டி அவர்களால் 05.05.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் மனுதாரர் 29.04.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை அதனையடுத்து மனுதாரர் 29.05.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம் SA 9618/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு 02.08.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 04.11.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். மனுதாரர் 24.12.2024 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் 22.05.2025 தேதியிட்ட காணொளிக் காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாக ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலர்களுக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. அதனடிப்படையில் 22.05.2025 அன்று திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வாயிலாக நடத்தப்பட்ட காணொளிக் காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகியிருந்தார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி ரா. ராஜராஜேஸ்வரி, பொதுத் தகவல் அலுவலர் / பிரிவு அலுவலர்,

வணிகவரி மற்றும் பதிவு(ஜே2)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை மற்றும் திரு லிபின், பொதுத் தகவல் அலுவலர் / ‘சிஏ’ பிரிவு கண்காணிப்பாளர், பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம், சென்னை, மற்றும் திரு ரா. ராஜேஸ்கண்ணன், பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், நாகல்நாயக்கன்பட்டி, ஆகியோர் ஆணையத்தில் நேரில் ஆஜராகியிருந்தார்கள்.

4. அன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் அவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாக விசாரணையின்போது தெரிவித்தார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர் இவ்வழக்கில் தான் கோரிய பொருள் தொடர்பான தனது மற்றொரு வழக்கானது SA 9909/2023 06.05.2025 அன்று ஆணையத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கிணங்க பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். ஆனால் இவ்வழக்கில் தனக்கு பொதுத் தகவல் அலுவலரால் எந்தவித தகவல்களும் வழங்கப்படவில்லையென்று விசாரணையின் போது தெரிவித்தார்.

5. மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் அடங்கிய கடிதத்தினை பொதுத் தகவல் அலுவலர் 22.05.2025 அன்று நடத்தப்பட்ட விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அத்தகவல்கள் ஆணையத்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அத்தகவல்கள் தவறானது என்பதை ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு எடுத்துரைத்தது.

6. மனுதாரர் சர்வே எண்.1542ஐப் குறித்து 1975ம் வருடத்திற்கு முந்தைய ஆண்டுகளில் உள்ள பதிவு விவரம் குறித்து தனக்கு தகவல்கள் வழங்குமாறு விசாரணையின்போது கோரியிருந்தார். **எனவே, பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், நாகல்நாயக்கன்பட்டி மனுதாரரின் கோரிக்கை குறித்து ஒரு வார காலத்திற்குள் அலுவலக பராமரிப்பில் உள்ள 1975ம் வருடத்திற்கு முந்தைய மூல ஆவணங்களின் அடிப்படையில் திருத்திய / சரியான தகவல்களை ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன், தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையையும் ஆணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.**

**7. அதனையடுத்து, இன்று (09.06.2025) இவ்வழக்கிற்கான பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், நாகல்நாயக்கன்பட்டி அவர்கள் ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரருக்கு 23.05.2025 மற்றும் 30.05.2025 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதில் மனுதாரர் கோரிய சர்வே எண். 1542 குறித்து ஆவணஎண்.178/1976 பரிசீலிக்கப்பட்டதில், மேற்படி ஆவணத்தில் டவுண் சர்வே எண்.1542-ஐப் பொறுத்து முன் ஆவணம் ஏதும் குறிப்பிடப்படவில்லையென்ற தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அத்தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையும் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, மேற்படி ஒப்புகை அட்டையின் நகலினை இணைத்து**

**ஆணையத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளார். மேலும் வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து மனுதாரரை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டதாகவும், வழங்கப்பட்ட தகவல்கள் தனக்கு திருப்தியாக உள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளதாகவும் ஆணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார்.**

**8. எனவே, 22.05.2025 தேதியிட்ட ஆணையத்தின் உத்தரவானது பொதுத் தகவல் அலுவலரால் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அதனை ஆணையம் ஏற்று, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 9618/SCIC/2023</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
பிரிவு அலுவலர்,
வணிகவரி மற்றும் பதிவு (ஜே2)த்துறை,
தலைமைச்செயலகம், சென்னை

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
நாகல்நாயக்கன்பட்டி,
திண்டுக்கல் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர் 'சிஏ' பிரிவு,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை 28

**<u>மனுதாரர்:-</u>**

திரு B. சகில்சேட்,
39-A, நத்தர்ஷா தெரு,
வேகம்பூர், திண்டுக்கல் 624 002

Copy to: File TK/PS